நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, சங்ககிரி

முன்னிலை : திருமதி. எஸ்.சத்தியா, பி.ஏ., பி.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15- ஆம் நாள் புதன்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 379/ 2023**

**(CNR.No. TNSA09-001792-2023)**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | - | அரசு தரப்பில் காவல் உதவி ஆய்வாளர், சங்ககிரி காவல் நிலையம், கு.எண். 128/2023 |
| குற்றம் சாட்டப்பட்டவர் | - | ஜெகநாதன், த/பெ. கந்தசாமி 65- நாட்டாம்பாளையம், சங்ககிரி மேற்கு, சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம். |
| வனையப்பட்ட குற்றங்கள் | - | U/s. 279, 338 of IPC |
| குற்றம் நிகழ்ந்த நாள் | - | 25.03.2023 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | - | 26.03.2023 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | - | 05.04.2023 |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | - | 05.04.2023 (Station bail) |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | - | 07.10.2023 |
| எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | - | 09.11.2023 |
| சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள் | - | 18.06.2024 |

| | | |
|---|---|---|
| சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நாள் | - | 27.03.2026 |
| குவிமுச.பிரிவு.311-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விவரம் | | கடந்த 18.06.2025 அன்று அ.சா.1 முதல் அ.சா.3 - வரையானவர்களை குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என கோரி மனுதாரர் / எதிரி தரப்பில் குவிமுச.பிரிவு.311-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு CMP.No.493/2025-ல் 18.06.2025 - ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது. |
| குவிமுச.பிரிவு.313(1)(ஆ)-இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | - | 30.03.2026 |
| தலைமறைவு எதிரிகள் குறித்த விவரம் | - | Nil |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம் | - | Nil |
| தீர்மானம் | - | எதிரி U/s. 279, 338 of IPC - ன் கீழ் குற்றவாளி |
| முடிவு | - | இறுதியாக, எதிரிமீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 279, 338 of IPC-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் எந்தவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு இவ்வழக்கில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக முடிவுசெய்து, எதிரி பிரிவுகள் 279, 338 of IPC-ன் கீழ் குற்றவாளியென தீர்மானித்து, எதிரிக்கு பிரிவு 279 of IPC -ன் கீழான குற்றத்திற்கு ரூ.1000/-அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் ஒருவாரம் மெய்க்காவல் |

| | | |
|---|---|---|
| | | சிறைதண்டனையும், பிரிவு 338 of IPC பிரிவின் கீழான குற்றத்திற்கு ரூ.1000/-அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் இரண்டுவாரம் மெய்க்காவல் சிறைதண்டனையும் விதித்து கு.வி.மு.ச பிரிவு 255(2) -ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராதம் ரூ. 2000/-. வழக்குச்சொத்து இல்லை. |

இந்த வழக்கு 07.10.2023 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்களும், எதிரிக்காக வழக்கறிஞர் திரு.S.தர்மேந்திரா, திரு.S.குமரேசன், திரு.R.சுரேஷ் ஆகியோர்கள் ஆஜராகியும், இருதரப்பும் கேட்டறிந்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்,

## தீர்ப்புரை

**சங்ககிரி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையின் விவரம்**:

2.1) கடந்த 25.03.2023 ம் தேதி 13.00 மணிக்கு சங்ககிரி காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, சங்ககிரி to திருச்செங்கோடு செல்லும் ரோட்டில் நாரப்பன்சாவடி ஆவின் பாலகம் அருகே, வடக்கில் இருந்து தெற்காக சங்ககிரி பக்கமிருந்து திருச்செங்கோடு நோக்கி சாட்சி-2 தேவேந்திரன் என்பவர் TN 36 AH

6314 என்ற பதிவெண்கொண்ட TVS XL 100 HD இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்று கொண்டிருந்தபோது, அவருக்கு பின்னால் அதே திசையில் எதிரி TN 54 U 0876 என்ற பதிவெண்கொண்ட RENAULT TRIBE காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று சாட்சி-2 ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது இதச. பிரிவு 279 - ன் கீழும்,

2.2) மேற்படி அதே தேதி, அதே நேரம், அதே இடத்தில் வைத்து அதே சம்பவத்தின் போது, சாட்சி-2 க்கு கொடுங்காயம் ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது இதச. பிரிவு 338 - ன் கீழும் சங்ககிரி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் இந்நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் குவிமுச பிரிவு 207-ன் கீழ் வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டது. அதன் பின்பு குவிமுச பிரிவு 251-ன் கீழ் எதிரியிடம் 279, 338 இ.த.ச பிரிவுகளின் கீழ் குற்றங்கள் பற்றி வினவ எதிரி குற்றங்களை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. **<u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் சாராம்சம் பின்வருமாறு</u>** : -

4.1) அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 25.03.2023 - ம் தேதி, மதியம் ஒரு மணியளவில் தன்னுடைய கணவர் தேவேந்திரன் தங்களுடைய டிவிஎஸ் இருசக்கர வாகனத்தில் திருச்செங்கோடு டு சங்ககிரி சாலையில் நாரப்பன்சாவடி என்ற

இடத்தின் அருகே சென்று கொண்டிருந்த போது கார் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டதாக அங்கிருந்த ஆவின் பாலகத்தில் வேலை செய்த செந்தில்முருகன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தன்னிடம் தகவல் சென்னதாகவும், தன்னுடைய கணவரை சங்ககிரியில் டி.ஏ.எம் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்றிருப்பதாக கூறியதாகவும், அவருக்கு பின்தலையிலும், வலது தோள்பட்டையிலும் அடிப்பட்டிருந்ததாகவும், பின்னர் மேல் சிகிச்சைக்காக தன்னுடைய கணவரை ஈரோடு பீரித்தி மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும், போலிசார் மருத்துவமனை வந்து தன்னிடம் புகார்வாக்குமூலம் (அ.சா.ஆ.1) பெற்றனர் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

4.2) அ.சா.5 தனது சாட்சியத்தில், பார்வை மகசரிலுள்ள 2-வது சாட்சி கையொப்பம் (**அ.சா.ஆ.2**) தன்னுடையது தான் என்று சாட்சியமளித்துள்ளார்.

4.3) அ.சா.6 திரு.செல்வராஜ் காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் தனது சாட்சியத்தில், தான் தற்போது சங்ககிரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி திரு. சுதாகரன், என்பவர் பணிமாறுதலில் சென்றுவிட்டதாகவும், அவருக்கு பதிலாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 26.03.2023 - ம் தேதி, சங்ககிரி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக திரு. சண்முககுமார், அவர்கள் பணிபுரிந்தபோது, முன்னதாக ஈரோடு பிரீத்தி மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற RTA தகவலின்பேரில் அங்கு சென்று

பார்த்தபோது காயம்பட்ட தேவேந்திரன் என்பவர் மயக்க நிலையில் இருந்ததால் உடனிருந்த அவரது மனைவி யசோதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின்பேரில் சங்ககிரி காவல் நிலைய குற்ற எண்.128/2023, சட்டப்பிரிவுகள் 279, 337 இதச ஆகிய பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை (**அ.சா.ஆ.3**) பதிவு செய்ததாகவும்,

4.4) பின்னர், அன்றைய தினமே, பிற்பகல் சுமார் 12.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் கார்த்திக் மற்றும் கௌதம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் (**அ.சா.ஆ.4**) வரைந்து பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகள் கையொப்பம் பெற்றதாகவும்,

4.5) பின்னர், சாட்சிகளை விசாரணை செய்ததில் எதிரி ஜெகநாதன், என்பவர் TN 54U 0876 என்ற பதிவு எண் கொண்ட Renault Triber காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து மோதி விபத்தை ஏற்படுத்தியது உண்மையென தெரிந்து எதிரி ஜெகநாதன், என்பவரை தேடிவந்த நிலையில் கடந்த 05.04.2023 ஆம் தேதி, மாலை சுமார் 04.30 மணிக்கு சங்ககிரி காவல் நிலையம் முன்பு வைத்து எதிரியை கைது செய்து தக்க இருநபர் நிலைய பிணையில் விடுவித்ததாகவும்,

4.6) பின்னர், இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனங்களை வேண்டுகோள் கடிதம் கொடுத்து மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பிவைத்து, பின்னர், வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர்

திரு.செந்தில்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து ஆய்வறிக்கைகளை (**அ.சா.ஆ.5, அ.சா.ஆ.6**) பெற்றதாகவும்,

4.7) பின்னர், அன்றைய தினமே, விபத்தில் காயமடைந்த தேவேந்திரன் என்பவருக்கு சிகிச்சை அளித்த கோவை ராயல் கேர் மருத்துவமனை மருத்துவர் திரு.ஜெயசிங், என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து தேவேந்திரன் என்பவரின் விபத்து பதிவேட்டு அறிக்கை (**அ.சா.ஆ.7**) மற்றும் காயச்சான்றிதழ் (**அ.சா.ஆ.8**) பெற்றதாகவும்,

4.8) பின்னர், தேவேந்திரன் என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என மருத்துவர் காயச்சான்று வழங்கியதால் அன்றைய தினமே, இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இதச-பிரிவிலிருந்து சட்டப்பிரிவுகள் 279, 338 இதச- பிரிவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை (**அ.சா.ஆ.9**) தயார்செய்ததாகவும்,

4.9) அத்துடன் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 279, 338 இதச-ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற இறுதிஅறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் முடிவடைந்த பிறகு எதிரிக்கு பாதகமாக தோன்றக் கூடிய அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(b)-ன் கீழ் தொகுத்து வினவிய போது எதிரி அதனை மறுத்தார். எதிரி தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே எதிரிதரப்பு சாட்சியம்

முடித்துக்கொள்ளப்பட்டது. பின்னிட்டு எதிரி தாமாக முன் வந்து குற்றத்தை ஒப்புக் கொண்டு குற்ற ஒப்புதல் மனு தாக்கல் செய்துள்ளார்.

6. தற்பொழுது இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

7. அரசுதரப்பில் அ.சா.1 முதல் 6 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் 9 வரையிலான ஆவணங்கள் குறியீடும் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் பட்டியல் சாட்சிகளான 6 முதல் 9 வரையானவர்களை அரசு தரப்பில் விசாரணை செய்யப்படாமல் நீக்கரவு செய்யப்பட்டுள்ளார்கள். எதிரிதரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**விவாதம், தீர்வு மற்றும் தீர்வுக்கான காரணம்**:

8. இருதரப்பும் கேட்கப்பட்டது வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

9. அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகளின் மூலமாகவும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும், அரசுதரப்பு தன் வழக்கினை மெய்ப்பித்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு தண்டணை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

10. மாறாக எதிரி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தம்முடைய வாதத்தில், அ.சா.2 - விபத்து சமயத்தில் தலைகவசம் அணியவில்லை என்றும், அ.சா.2-ன் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் இந்த விபத்திற்கு காரணம் என்றும், எதிரிக்கும் இந்த விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும், எனவே எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

11. இவ்வழக்கில் புகார்தாரர் சாட்சியாக அ.சா.1-ம், காயம்பட்ட சாட்சியாக அ.சா.2-ம், கண்ணுற்ற சாட்சியாகளாக அ.சா.3, அ.சா.4-ம், பார்வை மகஜர் சாட்சியாக அ.சா.5-ம், இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி அ.சா-6 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

12. எதிரி மீதான இ.த.ச பிரிவுகள் 279, 338 - ன் கீழான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை பரிசீலிக்கும் போது, அரசு தரப்பு வழக்கின்படி, கடந்த 25.03.2023 ம் தேதி 13.00 மணிக்கு சங்ககிரி காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, சங்ககிரி to திருச்செங்கோடு செல்லும் ரோட்டில் நாரப்பன்சாவடி ஆவின் பாலகம் அருகே, வடக்கில் இருந்து தெற்காக சங்ககிரி பக்கமிருந்து திருச்செங்கோடு நோக்கி சாட்சி-2 தேவேந்திரன் என்பவர் TN 36 AH 6314 என்ற பதிவெண்கொண்ட TVS XL 100 HD இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்று கொண்டிருந்தபோது, அவருக்கு பின்னால் அதே திசையில் எதிரி TN 54 U 0876 என்ற பதிவெண்கொண்ட RENAULT TRIBE காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று அ.சா.2 ஓட்டிச்சென்ற இருசக்கர

வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி, அ.சா.2-க்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தினார் என்பதாகும்.

12.1) அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் கடந்த 25.03.2023 ம் தேதி 13.00 மணிக்கு சங்ககிரி காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, சங்ககிரி to திருச்செங்கோடு செல்லும் ரோட்டில் நாரப்பன்சாவடி ஆவின் பாலகம் அருகே, வடக்கில் இருந்து தெற்காக சங்ககிரி பக்கமிருந்து திருச்செங்கோடு நோக்கி சாட்சி-2 தேவேந்திரன் என்பவர் TN 36 AH 6314 என்ற பதிவெண்கொண்ட TVS XL 100 HD இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்று கொண்டிருந்தபோது, அவருக்கு பின்னால் அதே திசையில் TN 54 U 0876 என்ற பதிவெண்கொண்ட RENAULT TRIBE காரை சென்றுள்ளதும், அப்போது அ.சா.2 ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டுள்ளதும், இவ்வழக்கு விபத்து சம்பந்தமாக கடந்த 26.03.2023 -ஆம் தேதி அ.சா.2 ஈரோடு பிரீத்தி மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது அ.சா.1-யிடம் சங்ககிரி போலீசார் புகார் வாக்குமூலம் பெற்றுச்சென்றுள்ளது அ.சா.ஆ-1 மூலமும், மேற்படி புகார் வாக்குமூலத்தின் பேரில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சண்முககுமார் அவர்கள் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதும், பின்னர் அன்றையதினமே சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் (அ.சா.ஆ.2) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.4) தயார்செய்துள்ளதும், வழக்கில் கண்ட வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வறிக்கைகள் (அ.சா.ஆ.5, அ.சா.ஆ-6) பெறப்பட்டுள்ளதும், இவ்வழக்கு விபத்தில்

அ.சா.2-க்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது அ.சா.ஆ.7 விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் அ.சா.ஆ.8 காயச்சான்றிதழ் மூலமும், மேலும் அ.சா.2-க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பதால் அ.சா.ஆ.9 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார்செய்யப்பட்டுள்ளது அ.சா.6-ன் சாட்சியத்தின் மூலம் நிரூபணமாகியுள்ளது.

12.2) மேற்படி விபத்தின் மூலம் அ.சா.2 - க்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது நிரூபணமாகியுள்ள நிலையில், இவ்வழக்கு விபத்தை எதிரி மேற்படி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று ஏற்படுத்தினாரா என்பது குறித்து பரிசீலிக்கும்போது, இவ்வழக்கின் காயம்பட்ட சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 25.03.2023 ம் தேதி மதியம் ஒரு மணியளவில் தான் தன்னுடைய டிவிஎஸ் எக்ஸல் இருசக்கர வாகனத்தில் சங்ககிரி டு திருச்செங்கோடு சாலையில் நாரப்பன்சாவடி என்ற இடத்தில் தன்னுடைய வீட்டிற்கு வருவதற்காக சாலையின் இடதுபுற ஓரமாக மண்பாதையிலிருந்து ஒரு அடி தள்ளி தார் ரோட்டில் வந்து கொண்டிருந்ததாகவும், அப்போது தனக்கு பின்னால் வந்த ரெனால்டு டிரைபர் என்ற கார் கட்டுபாடில்லாமல் வந்து தன் மீது மோதியதில் தான் அருகே இருந்த 10 அடி ஆழமுள்ள பள்ளத்திற்குள் விழுந்து விட்டதாகவும், ஆவின் பாலகத்தில் இருந்தவர்களும், அருகில் இருந்தவர்களும் தன்னை தூக்கிவிட்டதாகவும், தனக்கு பின்தலையிலும் வலது தோள்பட்டையிலும் அடிப்பட்டதாகவும், ஆஜர் எதிரி தான் அந்த காரை ஓட்டி வந்த நபர் என்றும், சங்ககிரியில் உள்ள டி.ஏ.எம். மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை

பெற்றதாகவும், பின்னர் ஈரோடு பிரீத்தி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

12.3) இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 25.03.2023 ம் தேதி மதியம் 01.00 மணியளவில் நாரப்பன்சாவடி, IOCL நிறுவனத்தின் அருகே உள்ள ஆவின் பாலகம் என்ற டீக்கடையில் டீ குடிப்பதற்காக வந்திருந்ததாகவும், அப்போது சங்ககிரியிலிருந்து திருச்செங்கோடு நோக்கி ஒருவர் TVS XL இருசக்கர வாகனத்தில் சாலையின் இடதுபுறமாக சென்று கொண்டிருந்தாகவும், அப்போது சங்ககிரியிலிருந்து திருச்செங்கோடு நோக்கி கார் ஒன்று வேகமாக சென்றுகொண்டிருந்ததாகவும், அப்போது டப் என்று விபத்து நடந்ததுபோல் சத்தம் கேட்டதாகவும், தான் உடனே ஓடிச்சென்று பார்த்ததாகவும், அவர் மண் பாதையில் விழுந்துகிடந்ததாகவும், தலை மற்றும் கையில் அடிப்பட்டிருந்ததாகவும், ஆஜர் எதிரி தான் அவருடைய வாகனத்தை வேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்ததே இந்த விபத்துக்கான காரணம் என்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும் எதிரி தாமாக முன் வந்து குற்றத்தை ஒப்புக் கொண்டு குற்ற ஒப்புதல் மனு தாக்கல் செய்துள்ளார்.

12.4) எனவே மேற்படி பரிசீலனையிலிருந்து எதிரி TN 54 U 0876 என்ற பதிவெண்கொண்ட RENAULT TRIBE காரை ஓட்டிச்சென்று அ.சா.2 ஓட்டிவந்த TN 36 AH 6314 என்ற பதிவெண்கொண்ட TVS XL 100 HD இருசக்கர வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தி அ.சா2 - க்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளார்

என்பது சந்தேகத்திற்கிடமின்றி இவ்வழக்கில் அரசுதரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13) இறுதியாக, எதிரிமீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 279, 338 of IPC-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் எந்தவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு இவ்வழக்கில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக முடிவுசெய்து, எதிரி பிரிவுகள் 279, 338 of IPC-ன் கீழ் குற்றவாளியென தீர்மானித்து, எதிரிக்கு பிரிவு 279 of IPC -ன் கீழான குற்றத்திற்கு ரூ.1000/-அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் ஒருவாரம் மெய்க்காவல் சிறைதண்டனையும், பிரிவு 338 of IPC பிரிவின் கீழான குற்றத்திற்கு ரூ.1000/-அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் இரண்டுவாரம் மெய்க்காவல் சிறைதண்டனையும் விதித்து கு.வி.மு.ச பிரிவு 255(2) -ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராதம் ரூ. 2000/-. வழக்குச்சொத்து இல்லை.

எதிரி பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை திருத்தம் செய்து, இன்று 15.04.2026 - ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

SATHIYA S

Digitally signed by SATHIYA S
Date: 2026.04.15 17:48:18 -0100

நீதித்துறை நடுவர் எண்.1,

சங்ககிரி.

அரசு தரப்பு சாட்சிகள்:-

| | |
|---|---|
| அ.சா.1 | யசோதா, புகார்தாரர் சாட்சி. |
| அ.சா.2 | தேவேந்திரன் , காயம்பட்ட சாட்சி. |
| அ.சா.3 | வெங்கட்ராமன், கண்ணுற்ற சாட்சி. |
| அ.சா.4 | செந்தில்முருகன், கண்ணுற்ற சாட்சி. |
| அ.சா.5 | கௌதம், பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.6 | திரு.செல்வராஜ், காவல் உதவி ஆய்வாளர். |

அரசு தரப்பு சான்றாவணங்கள்:

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 26.03.2023 | புகார்வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | 26.03.2023 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.3 | 26.03.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 26.03.2023 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 05.04.2023 | TN 54 U 0876 என்ற பதிவெண்கொண்ட வாகனத்தின் ஆய்வறிக்கை. |
| அ.சா.ஆ.6 | 26.04.2023 | TN 36 AH 6314 என்ற பதிவெண்கொண்ட வாகனத்தின் ஆய்வறிக்கை. |
| அ.சா.ஆ.7 | 26.03.202312 | அ.சா.2-ன் விபத்து பதிவேட்டு அறிக்கை. |
| அ.சா.ஆ.8 | 03.04.2023 | அ.சா.2-ன் காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ-9 | 26.05.2023 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

சான்றுப்பொருள் : இல்லை.

எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

<u>குறிப்புகள்</u>:

1) விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்துள்ளார்.

2) வழக்கின் சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணையின்றி நிறுத்தப்படவில்லை.

3) வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

SATHIYA S

Digitally signed by SATHIYA S
Date: 2026.04.15 17:48:27 -0100

நீதித்துறை நடுவர் எண்.1,

சங்ககிரி.

JUDICIAL MAGISTRATE NO.I COURT, SANKARI
PRESENT: TMT.S.SATHIYA, B.A.,B.L.,
JUDICIAL MAGISTRATE NO.I, SANKARI
CASE SUMMARY
CC-379/2023, Cr.No. 128/2023, SANKARI POLICE STATION
CNR.No.TNSA-09-001792-2023

| S.No | Particulars | Purpose |
|---|---|---|
| i | The period of remand of the accused | The accused was station bail |
| ii | The date of filing of the Complainant/Final report in the Court | 07.10.2023 |
| iii | The date of Committal of the case to the Court of Session | NIL |
| iv | The date of questioning of the accused as the case may be | 09.11.2023 |
| v | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts: except routine petitions like petitions under Section 317 of the Code | 1.Petition filed by the petitioner/ Accused U/s.311 of Cr.P.C petition filed for cross of PW1 to PW3 and numbers assigned as CMP.No. 493/2025, dated:18.06.2025 Petition was allowed on 18.06.2025.<br><br>2. Petition filed by the petitioner/ Accused Surrender, U/s.70(2) of Cr.P.C, Advance hearing, Recall petitions filed and numbers assigned as CMP.No.1024/2024, 1025/2024, 1026/2024, dated: 08.08.2024 Petitions were allowed on 08.08.2024. |
| vi | Date of Examination in-chief and cross-examination of a witness | PW1 was Chief examined on 18.06.2024 and cross examined on 02.07.2025. |
| | | PW2 was Chief examined on 18.06.2024 and cross examined on 02.07.2025. |
| | | PW3 was Chief examined on 19.11.2024 and cross examined on 08.07.2025. |
| | | PW4 was Chief examined on 21.07.2025. |
| | | PW5 was Chief and cross examined on 25.08.2025. |
| | | PW6 was Chief and cross examined on 27.03.2026. |
| vii | Date of examination of the accused under section 313 of the Code | 30.03.2026 |
| viii | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; | NIL |
| ix | Grant of stay by superior Courts and the results thereof | NIL |

SATHIYA S
Digitally signed by SATHIYA S
Date: 2026.04.15 17:48:37 -0100

Judicial Magistrate No.I,
Sankari

## JUDICIAL FORM NO. 61

## (Rule 106 of Crl.R.P)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, SANKARI

JUDGMENT IN CC.NO. 379/2023

Complainant : காவல் உதவி ஆய்வாளர், சங்ககிரி காவல்நிலையம்.

Accused : ஜெகநாதன்

Offence : U/Sec. 279, 338 of IPC

Finding : எதிரி இதச. 279, 338 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டது.

Sentence : எதிரிக்கு குவிமுச பிரிவு. 255(2) - ன் கீழ் அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

| Serial Number | Description of the accused | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | Name | Father's Name | Caste or Religion | Occupation | Residence | Age |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | ஜெகநாதன் | கந்தசாமி | இந்து | - | 65- நாட்டாம்பாளையம், சங்ககிரி மேற்கு, சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம். | 39 |

| Date of | | | | | | | Explanation of delay |
|---|---|---|---|---|---|---|---|
| Occurrence | Complaint | Apprehension of appearance | Released on bail | Commencement of trial | Close of trial | Sentence or order | |
| (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) |
| 25.03.2023 | 26.03.2023 | 05.04.2023 | 05.04.2023 (Station bail) | 18.06.2024 | 27.03.2026 | 15.04.2026 | - |

SATHIYA S

Digitally signed by SATHIYA S
Date: 2026.04.15 17:49:00 -0100

நீதித்துறை நடுவர் எண்.1,

சங்ககிரி.